<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>
<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

**OS.No: 117/2024** **நாள் 01.12.2025.**

**பிவாசா.1, திரு.T.கனகராஜ்**

**பிவா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கின் வாதிகளும், 1 முதல் 3 எதிர்வாதிகளும் உடன் பிறந்த சகோதர , சகோதரிகள். என் அப்பா பெயர் லோகநாதன், அம்மா பெயர் ராமரம்மாள். எங்கள் பெற்றோர்களுக்கு எங்களை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை. பிராது 1, 2 அயிட்ட சொத்துக்கள் என் தாயார் ராமரம்மாளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பிராது 1 வது அயிட்ட சொத்தின் சர்வே எண்.848/1 என்றால் சரிதான். இந்த சொத்தானது கீழான்மறைநாடு வருவாய் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அதன் பட்டா எண்.766. பிராது 2ம் அயிட்ட சொத்தானது அப்பைநாயக்கன்பட்டி கிராம ஊராட்சிக்குட்பட்ட மேலான்மறை நாடு கிராமத்தில் உள்ள இடிந்த நிலையில் உள்ள காரை வீடு மற்றும் காலி மனை என்றால் சரிதான். அதன் நத்தம் சர்வே எண்.1217/90 என்றால் சரிதான். பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களை என் தாயார் உயிரோடு இருக்கும் காலம் வரையிலும், எந்த விதமான ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துபோய்விட்டார் என்றும் இந்த சொத்தானது தற்போது எங்களின் பொது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். பிராது 3, 4 அயிட்ட சொத்தானது என் தகப்பனார் லோகநாதன் என்பவரின் சித்தி நாரணம்மாளுக்கு பாத்தியம் என்று சொன்னால் அது சரிதான். நாரணம்மாளுடைய கணவர் பெயர் ரெங்கசாமி. அவர்களுக்கு குழந்தைகள் எதுவும் இல்லை. பிராது 3, 4 அயிட்ட சொத்துகளை பொறுத்தமட்டில் நாரணம்மாளும், ரெங்கசாமியும் உயிரோடு இருக்கும் காலம் வரையிலும் யாருக்கும் எந்த விதமான ஏற்பாடோ விற்பனையோ செய்யவில்லை. பிராது 3ம் அயிட்ட சொத்தின் சர்வே எண்.848/2 அது கீழான்மறை நாடு வருவாய் கிராமத்தில் உள்ளது அதன் பட்டா எண்.1186. பிராது 4வது அயிட்ட சொத்தின் சர்வே எண்.871. அது அப்பையநாயக்கன் பட்டி வருவாய் கிராமத்தில் உள்ளது. பிராது 5ம் அயிட்ட சொத்தானது புஞ்சை. 6 வது அயிட்ட சொத்தானது ஓட்டு வீடு மற்றும் காலியிடம். பிராது 5ம் அயிட்ட சொத்தின் சர்வே எண்.860/1ஏ. அந்த சொத்தானது கீழான்மறைநாடு வருவாய் கிராமத்தில் உள்ளது. பிராது 6ம் அயிட்ட சொத்தானது அப்பையநாயக்கன் பட்டி கிராமத்திற்குட்பட்ட மேலான்மறைநாடு கிராமம் நத்தம் என்று சொன்னால் அது சரிதான். அதன் சர்வே எண்.1217/68 என்றால் சரிதான். அந்த சர்வே எண்ணில் ஓட்டு வீடு மற்றும் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். அதன் கதவு எண்.4/252 . மின் இணைப்பு எண்.424. பிராது 5, 6 அயிட்ட சொத்துக்கள் என் தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள். பிராது 7ம் அயிட்ட சொத்தானது தற்போது தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தாலுகா பந்தபுளி ஊராட்சி எல்லைக்குட்பட்ட விஜயரங்கபுரம் கிராமத்தில் அமைந்துள்ள காரை வீடு என்றால் சரிதான். அதன் நத்தம் சர்வே எண் . 649, அது 5வது வார்டில் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்தானது என் அப்பா 2005ம் ஆண்டு கிரையம்

வாங்கினார். ஆவணம் எண்.176/2005.இந்த சொத்தானதை என் அப்பா உயிரோடு இருக்கும் வரைக்கும் யாருக்கும் எந்தவிதமான ஏற்பாடும் கிரையமும் செய்யவில்லை. பிராது 1 முதல் 7 அயிட்ட சொத்துக்களை தவிர எங்கள் பொது குடும்பத்துக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் வேறு எதுவும் இல்லை என்றால் அது சரிதான். 26.04.1956 ம் ஆண்டு என் அப்பாவும், பெரியப்பா வீராச்சாமியும் சேர்ந்து ஒரு சொத்தை கிரையம் வாங்கியதாக நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தை தான் பிராது 3ம் அயிட்டமாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். பிராது 1 முதல் 6 அயிட்ட சொத்துக்களை பொறுத்தும் என் தாத்தாவும் என் பெரியப்பாவும் , என் அப்பாவும் சேர்ந்து 07.06.1991ம் ஆண்டு கரிவலம் வந்தநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பதிவு செய்யப்பட்ட ஒரு பாக பத்திரத்தை எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் 1வது தபசிலாக காண்பிக்கப்பட்ட சொத்தானது என் தாத்தா குருசாமி நாயக்கருக்கு பாத்தியமானது . அதில் கண்ட 2வது தபசில் சொத்தானது என் பெரியப்பா வீராச்சாமிக்கு பாத்தியமானது. அந்த ஆவணத்தில் கண்ட 3ம் தபசில் சொத்தானது என் அப்பா லோகநாதன் என்பவருக்கு பாத்தியமானது. அந்த ஆவணத்தில் கண்ட 1 வது தபசில் சொத்தாக ரூ.5000/-ம் ஜீவனாம்சமாக என் தாத்தாவுக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணப்படிக்கு என் தாத்தாவுக்கு நிலங்கள் எதுவும் ஒதுக்கப்பட்டதா இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கண்ட 2 வது அயிட்ட சொத்தானது என் பெரியப்பாவுக்கு நிலங்களும் வீடும் ஒதுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அவருக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் விஜயரங்கபுரம் கிராமத்தில் சேர்ந்த நிலங்களும் , கொடுக்காம்பட்டி கிராமத்தில் உள்ள இரண்டு நிலங்களும் ஒதுக்கப்பட்டது. அவருக்கு அப்பையன்நாயக்கன் பட்டி வருவாய் கிராமத்தில் உள்ள சொத்துக்களும் கீழான்மறை நாடு கிராமத்தில் உள்ள சொத்துக்களும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் என் அப்பாவுக்கு ஒதுக்கப்பட்ட 3வது தபசிலில் 1வது அயிட்டமாக அப்பையநாயக்கன் பட்டி வருவாய் கிராமத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.871ல் ஏக்கர் 2 சென்ட் 96 என ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்களும் என் தகப்பனாரின் சிறிய தாயார் நாரணம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களும் நீண்ட நாட்களாக பொது குடும்பத்தில் வைத்து அனுபவித்து வந்த சொத்துக்களை தான் 07.06.1991ம் ஆண்டு பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். என் தாயார் 03.03.2016ம் ஆண்டு இறந்துபோனார். அந்த பாக பிரிவினையில் என் அப்பாவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் இருந்து சில சொத்துக்களை பொது குடும்ப நன்மைக்காக விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். ஒரு சொத்தானது கண்மாய்க்கு அரசால் கையகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட தொகையும் பொது குடும்ப நன்மைக்காகத்தான் என் அப்பா பயன்படுத்தி வந்தார் என்றால் சரிதான். என் அப்பா அவ்வாறு பொது குடும்பசொத்துக்களில் சிலவற்றை விற்பனை செய்த பொழுது

அரசால் கண்மாய்க்காக கையகப்படுத்தி வழங்கப்பட்ட தொகையும் வழக்கில் உள்ள 1 முதல் 3 வாதிகளும், வழக்கில் உள்ள 1 முதல் 3 எதிர்வாதிகளும் அப்போது மைனர்கள் என்று சொன்னால் அது சரிதான். பிராது 4ம் அயிட்ட சொத்தை என் அப்பா எனக்கு 03.01.2022ம் தேதியில் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக எழுதிக்கொடுத்தார். எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட மேற்படி 03.01.2022ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்அப்பா கிரையம் மூலமாக வாங்கப்பட்ட சொத்து என்று சொல்லாமல் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்று தான் அதில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பிராது 4ம் அயிட்ட சொத்தை பொறுத்து பூர்வீக சொத்து என்பதால் என் அப்பாவுக்கு பாத்தியப்பட்ட ஒரு பாகத்தை பொறுத்து மட்டும் தான் எனக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக எழுதி கொடுக்க முடியும் என்றும் மொத்த குடும்ப சொத்தையும் சேர்த்து என் அப்பா எனக்கு தான செட்டில்மெண்ட் மூலமாக எழுதிக்கொடுக்க முடியாது என்றால் அப்படியில்லை . அந்த தான பத்திரத்தில் என் அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த சர்வே எண்.871ல் ஏக்கர் 2 செண்ட் 96 என்றால் சரிதான். 1991ம் ஆண்டு நடைபெற்ற பாக பிரிவினை பபத்திரத்தில் என் அப்பா கையெழுத்து தான் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் 5ம் வகுப்பு வரை படித்துள்ளார் அவர் தெளிவாக கையெழுத்து செய்வார். என் தாயார் 2016ம் ஆண்டு இறந்த பின்பு என்அப்பா 1ம் வாதி சுப்புலட்சுமி வீட்டில் சில காலமும், 2ம் எதிர்வாதி சுப்புராஜ் என்பவர் வீட்டில் கோயம்புத்தூரில் சில காலமும், இறுதியாக இறப்பதற்கு 5 மாதத்திற்கு முன்பாக என் வீட்டிற்கு வந்து இருந்தார். என் அப்பா 17.04.2022ம் தேதியில் இறந்துபோனார். என் அப்பா இறப்பதற்கு முன்பு தான் தான செட்டில் மெண்ட பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த தான பத்திரத்தில் என் அப்பா கையெழுத்து போடவில்லை கைரேகையை தான் வைத்துள்ளாரர் என்றால் சரிதான் . என் அப்பா என் வீட்டிற்கு வரும்போதே உடல் நலிவுற்று தான் வந்தார் என்றால் சரிதான். என் அப்பா சுயநினைவு இல்லாமல் இருந்த சமயத்தில் மோசடியாக அவருடைய கைரேகை பதித்து தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் வாங்கியுள்ளேன் என்றால் அது சரியல்ல. என் அப்பா நல்ல திடகாத்திரமாக இருந்திருந்தால் செட்டில்மெண்ட் ஆவணத்தில் அவரால் கையொப்பம் செய்து கொடுத்திருக்க முடியும் என்றால் அது சரியல்ல. என்அப்பா 27.04.2022ம் தேதியில் தான் இறந்துபோனார். அவர் இறப்பதற்கு பின்பாகவே இந்த வழக்கின் 1 முதல் 3 வாதிகள் , எனக்கும் , நான் கிரையம் கொடுத்த 4ம் எதிர்வாதியான ரம்யாவுக்கும் மற்றும் கனிமவள உதவிஇயக்குனருக்கும் 01.03.2024 வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பை அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் வாங்க மறுத்துவிட்டதாக திரும்பி வந்துள்ளது என்று சொன்னால் அன்றைய தினம் நான் ஊரில் இல்லை என்பதால் வாங்கவில்லை. வழக்கில் உள்ள 4ம் எதிர்வாதியான ரம்யாவும் , கனிமவள இயக்குனரும் வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். 28.03.2022ல் என் அப்பா உயிருடன் இருக்கும் பொழுது இவ்வழக்கின் 2, 3 வாதிகள் சேர்ந்து எங்கள் குடும்பத்தை சார்ந்த மற்ற உறுப்பினர்களுக்கு வழக்கறிஞர் மூலமாக

வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை என் அப்பா லோகநாதனும், வழக்கில் உள்ள 1ம் எதிர்வாதியான நானும் மற்றும் 2ம் எதிர்வாதியான சுப்புராஜ் என்பவரும் வாங்க மறுத்து விட்டதாக சொல்லி திரும்ப வந்துள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் எல்லா சொத்துக்களையும் பங்கு பாகம் பிரித்துகொடுக்க வேண்டும் என்று தான் சொல்லியுள்ளது என்றும், அந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லாது என்று சொல்லி தான் அனுப்பியிருந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் மூவரை தவிர மற்ற எங்களது குடும்ப உறுப்பினர்கள் அறிவிப்பை பெற்றுக்கொண்டார்கள். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை வைத்துக்கொண்டு எந்தவிதமான வில்லங்க பராதினங்கள் செய்யக்கூடாது என்று சொல்லி வழக்கில் உள்ள 2 முதல் 3 வாதிகள் கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலருக்கு 27.06.2023ம் தேதியில் ஒரு பதிவு தபால் அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் சர்வே எண்.871யை காட்டியுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பானதை 28.06.2023ம்தேதியில் சார்பதிவாளர் பெற்றுக்கொண்டுள்ளா'ர என்றால் சரிதான். அதன் பின்பு தான் இந்த வழக்கின் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை வாதிகள் தாக்கல் செய்து கொள்வதற்கு முன்பாகவும் வழக்கை தாக்கல் செய்த பின்பாகவும் எனக்கு பொதுக்குடும்பத்தில் இருந்து பாத்தியப்பட்ட இதர சொத்துக்களில் இருந்து எனக்கு பங்கு பாகம் வேண்டாம் என்றும், வாதிகளுக்கும், 2, 3 எதிர்வாதிகளுக்கும் நான் சொல்லிவிட்டேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் சர்வே எண்.871 தான் மதிப்புடைய சொத்து என்று சொன்னால் அதை விட மதிப்புடைய சொத்துக்கள் உள்ளது. வாதிகள் பிராது 4ம் அயிட்ட சொத்தில் பங்கு பாகம் கேட்டுவிடுவார்கள் என்ற எண்ணத்தில் நான் அவசரகதியாக 4ம் எதிர்வாதிக்கு சொத்தானதை கிரையம் மூலமாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொன்னால் அப்படியில்லை. 4ம் எதிர்வாதிக்கு நான் கிரையம் செய்து கொடுத்த சொத்தில் 1 முதல் 3 வாதிகளை அவர்களது பாகத்தை பொறுத்து கட்டுப்படுத்தாது என்று சொன்னால் கட்டுப்படுத்தும். பிராது 1 முதல் 7 அயிட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு சட்டப்படி 3/6 பங்கு உள்ளது என்று சொன்னால் பெண்களுக்கு என்ன என்ன செய்யவேண்டுமோ அத்தனையும் நாங்கள் செய்துளோம் எனவே வாதிகளுக்கு சட்டபபடி 3/6 பங்கு பாகம் இல்லை என்று நான் சொல்கிறேன். பெண்களுக்கு நாங்கள் என்ன ்என்ன செய்தோம் என்பதை காண்பிக்ககூடிய ஆவண ஆதாரத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அவர்களுக்கு பணம், நகைகள் போடப்பட்டது. அதற்கு எழுத்து பூர்வமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பெண் மக்களுக்கு நாங்கள் எதுவும் செய்யவில்லை என்பதால் அவர்கள் சட்டபப்டி 3/6 பங்கு பாகத்தை கோரியுள்ளார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. 1, 2 வாதிகள் பெண் மக்கள் ./சகோதரிகள் என்றும் 3ம் வாதி என் சகோதரர் என்று சொன்னால் என்றால் சரிதான். வழக்கில் உள்ள 2,3 எதிர்வாதிகளான என் சகோதரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகிஹ வழக்கை நடத்தவில்லை எஎன்றால் சரிதான். நான் மட்டுமே வழக்கை நடத்தி

வருகிறேன் என்றால் சரிதான். என்வே வாதிகள் கோரியவாறு அவர்களுக்கு பரிகாரம் கிடைக்க த்தக்கது என்று சொன்னால் அதுசரியல்ல. என் தகப்பனார் என்க்கு எழுதி வைத்த தான செட்டில்மெணட் ஆவணமோ வழக்கில் உள்ள 4ம் எதிரவாதிக்கு நான் செய்து கொடுத்த கிரையமோ சட்டப்படி செல்லாது என்று சொன்னால் அது சரியல்ல. என்னை தவிர மற்ற என் உடன் பிறந்த அனைவர்களும் பிராது சொத்துக்களை சரிசமமாக பிரித்துக்கொள்ள சம்மதம் தெரிவிக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் சரி என்று சொல்கிறார்கள் ஆனால் நான் என் அப்பாவை பார்த்துக்கொண்டதால் சரியல்லை என்று சொல்கிறேன். என் அப்பாவை கடைசியாக அவர் இறப்பதற்கு சுமார் 5 மாதத்திற்கு முன்பாக தான் நான் அவரை பார்த்து வந்தேன் என்று சொன்னால் அதற்கு முன்பாக என் அப்பாவை யாரும் பார்க்க மாட்டேன் என்றுசொன்னார்கள். வழக்கில் உள்ள 1ம் வாதி -சுப்புலட்சுமி என்பவர் என் அப்பாவை நல்ல முறையில் பார்த்து வந்தார்ர என்றும நான் தான் என் அப்பாவை அவரிடமிருந்து செட்டில்மெண்ட்ஆவணத்தை எழுதி வாங்குவதற்காக தா்ன அழைத்து வந்தேன் என்றும் அப்போது என் அப்பா சுயநினைவு இல்லாமல் இருந்தார்ர என்றால் சரியல்ல. எனவே சுயநினைவு இல்லாமல் என் அப்பா்விடமிருந்து நான் வாங்கிய தான பத்திரமும் அந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் 4ம் எதிர்வாதிக்கு செய்து கொடுத்த கிரையமும் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் அதுசரியல்ல. வாதிகளுக்கு 3/6 பாகம் சட்டப்படி கிடைக்ககூடியது என்று சொன்னால் அதுசரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 01st day of December 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.